**நூல் அஞ்சல் (BOOK POST) வாயிலாக**

ஒசூர்
08.09.2025

அனுப்புநர்

**A.**சேவியர்
தேர்தல் அலுவலர்,
**C/o.** தமிழ்நாடு பெட்ரோலிய
விற்பனையாளர்கள் சங்கம்.
**M/s.** பயனியர் ரோட்வேஸ்
பாரத் பெட்ரோலிய விற்பனையாளர்,
50H/21, ராயக்கோட்டை ரோடு, ஒசூர் - 635 109.

அன்பிற்கினிய உறுப்பினர்களுக்கு,

பொருள் : தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் 2025-28 ஆண்டிற்கான நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கான பிரதிநிதித்துவ அடிப்படையிலான நியமனங்கள் - சம்மந்தமாக.

------

தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் 2025-28-ம் ஆண்டிற்கான கீழ்கண்ட நிர்வாகக்குழு பதவிகளுக்கும், பிரதிநிதித்துவ அடிப்படையிலான நியமன செயற்குழு பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட தகுதியான விண்ணப்பங்கள் பெறப்படுமேயானால் மேற்படி விண்ணப்பங்கள் எதிர்வரும் **29.09.2025ம் தேதி திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள் சேலம் மாநகர்,** சங்ககிரி நெடுஞ்சாலை, அரியானூரில் அமைந்துள்ள **ஸ்ரீ ஆதித்யா மஹால் A/C-ல்** கீழ்கண்ட தேர்தல் அட்டவணையின்படி தேர்தல் நடைபெறும்.

ஏதேனும் ஒரு பதவிக்கு பதவியின் எண்ணிக்கை அளவிற்கான சமமான எண்ணிக்கை அளவில் மட்டுமே விண்ணப்பம் பெறப்பட்டிருக்குமேயானால் அந்த விண்ணப்பதாரர் போட்டியின்றி தேர்வு பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

## பதவிகள் விபரம் :

1. தலைவர்
2. துணைத்தலைவர்கள் -3 (IOCL, HPCL & BPCL மூன்று எண்ணெய் நிறுவனங்களிலிருந்து தலா ஒருவர்)
3. பொதுச்செயலாளர் -1
4. துணைச் செயலாளர் -1
5. பொருளாளர் -1
6. செயற்குழு உறுப்பினர்கள் - மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 நபர்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் உட்பட.

## தேர்தல் அட்டவணை

| | |
|---|---|
| வேட்பு மனு பெறுதல் | 12.09.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் |
| வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் * | 19.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி வரை |

* 19.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்குள் தேர்தல் அலுவலர் முகவரிக்கு வேட்பு மனு கிடைக்கப் பெற வேண்டும்.

| | |
|---|---|
| வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல் | 22.09.2025 திங்கட்கிழமை |
| வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல் | 23.09.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி வரை |
| இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் (இணையதளத்தின் வாயிலாக) | 24.09.2025 புதன்கிழமை காலை 10.00 மணி |
| வாக்கெடுப்பு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 29.09.2025 திங்கட்கிழமை காலை 11.30 மணி முதல் 12.30 மணிவரை |

மாநில சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களின் பட்டியல் 08.09.2025-ம் தேதி முதல் தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் **(www.tnpda.in)** பார்வையிடலாம்.

தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்பவர்களுக்கான விதிமுறைகள் தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் இணையத்தளத்திலிருந்து 08.09.2025-ம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தேர்தல் குறித்த விதிமுறைகள் இணைப்பு சங்கங்கள் மற்றும் ஆயுட்கால உறுப்பினர்களின் வாக்களிப்பதற்கான விதிமுறைகளை மாநில சங்கத்தின் இணையதளத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

நமது சங்கத்தின் 2025-28 ஆண்டுக்கான நிர்வாகக்குழுவிற்கான தேர்தல்களின் வெளிப்படை தன்மை மற்றும் நியாயமான நடத்தையை உறுதி செய்வதற்காக, முழு தேர்தல் செயல்முறையையும் மேற்பார்வையிட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை தலைமை தேர்தல் பார்வையாளராகவும், கீழ்கண்ட தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் பார்வையாளர்களின் மேற்பார்வையில் தேர்தல் இறையாண்மையுடன் நடைபெறும். அனைத்து முடிவுகளும் சங்க விதிகளுக்குட்பட்டும், தலைமை தேர்தல் பார்வையாளரின் இறுதி முடிவின்படி மேற்கொள்ளப்படும். வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது மற்றும் தேர்தல் நடத்துவது தொடர்பான அனைத்து முடிவுகளும் தலைமை தேர்தல் பார்வையாளரிடம் கலந்து ஆலோசித்து தேர்தல் அலுவலரால் எடுக்கப்படும் என்று உறுப்பினர்கள் ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ளனர். ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் தலைமை தேர்தல் பார்வையாளரின் முடிவே இறுதியானது மற்றும் பிணைக்கத்தக்கது, ஏனெனில் அந்த முடிவு ஒரு சுயாதீனமான நடுநிலையான மூன்றாம் தரப்பினரால் எடுக்கப்படுகிறது என்பதை அறியவும்.

**தேர்தல் குழு தலைமை**
**தேர்தல் பார்வையாளர்** : டாக்டர்.நீதியரசர். **P.R.சிவக்குமார்** (ஓய்வு)

**தேர்தல் அலுவலர்** : திரு. **A.சேவியர்**, ஓசூர்.

**தேர்தல் பார்வையாளர்கள்** :
1) திரு. **A.J.சூரியநாராயணா**, கரூர்.
2) திரு. **N.M.எத்திராஜன்**, கோயம்புத்தூர்.
3) திரு. **P.R.ராமலிங்கம்**, பண்ருட்டி.
4) திரு. **N.ரெங்கநாதன்**, பெரம்பலூர்.
5) திரு. **G.ஜெயபிரகாஷ்**, கோனேரிபட்டி (சேலம்).

தங்களன்புள்ள,

(A.சேவியர்)